# "சரஸ்வதி கலா நிகேதன்" 33வது ஆண்டு விழா



# 31 நாட்டிய ஆசிரியைகளுக்கு "நாட்டியாச்சார்யா புரஸ்கார்" விருது

சென்னை, ஏப் 23

வடசென்னை கொளத்தூரில் முனைவர் ஸ்ரீ சரஸ்வதி ஸ்ரீனிவாசன் தலைமையில் வெற்றிகரமாக இயங்கி வரும் ''சரஸ்வதி கலா நிகேதன்'' தன் 33 வது ஆண்டு விழா, 37 சிறுமிகளின் நாட்டிய நிகழ்ச்சி, நாட்டிய உலகில் வெற்றிகரமாக வலம் வந்து கொண்டிருக்கும் 31 நாட்டிய குருமார்களுக்கு "நாட்டியாச்சார்யா புரஸ்கார்" விருது அளிக்கும் விழா என ஒரே மேடையில் 3 மூன்று விழாக்களை சிறப்பாக எடுத்தது. (நாட்டியக் கலைஞர்களுக்கான சம்மேளனம் 'அபய்', சென்னையில் உள்ள பிரபல முன்னணி சபாக்கள் நடத்துவதைப் போல)

சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள ராஜாஜி வித்யாஸ்ரமத்தில் விழா நடந்தது.

விருது பெற்ற குருமார்களோடு அவர்களது சிஷ்யைகளும் பெருமளவுக்கு திரண்டு இருந்து, தங்கள் குரு விருது பெறுகிறபோது எழுப்பிய கைத்தட்டல் மகிழ்ச்சி ஆரவாரத்தில் அரங்கே அதிர்ந்தது. (குரு சிஷ்யை பாரம்பரியம்... கண்ணில் தெரிய, ஆனந்தம், ஆனந்தமே...)

டாக்டர் ஜெயந்தி யோகராஜா, டாக்டர் எஸ் விஜயலட்சுமி, பாக்கியஸ்ரீ சதீஷ், விமலா ராமநாராயணன், தாக்ஷாயினி ராமச்சந்திரன், வீணா ராமகிருஷ்ணன், சுந்தரி மகாதேவன், ஸ்மிதா செந்தில், உடுப்பி மதுமதி பிரகாஷ், காவேரி ரமேஷ், டாக்டர் கவிதா ஸ்ரீனிவாசன், டாக்டர் சித்ரா சுப்பிரமணி, டாக்டர் எஸ் பத்மா, டாக்டர் ராஜஸ்ரீ வாசுதேவன், கீதா சரஸ்வதி, சுதா ராஜன், ஹேமமாலினி, பத்மா டாக்டர் லலிதா வெங்கடேஷ், டாக்டர் ஜி ராஜலட்சுமி, ஹேமலதா ராமச்சந்திரன், டாக்டர் சங்கீதா சிவக்குமார், லதா அரவிந்தன், லட்சுமி என் ராவ், மலர்க்கொடி விஜயராகவன், டாக்டர் பிரியா கார்த்திகேயன், சுபஸ்ரீ, அருள்ஜோதி, தாரணி ராமகிருஷ்ணா, அகிலா சத்திய நாராயணா, டாக்டர் கார்த்தியாயினி ஆகியோருக்கு 'நாட்டியாச்சார்யா புரஸ்கார்' விருதுகளை சரஸ்வதி, அவரது கணவர் ஸ்ரீனிவாசன் இருவரும் வழங்கி கௌரவித்தனர். பொன்னாடை போர்த்தி அன்புப் பரிசையும் வழங்கினார்கள்.

சிறப்பு விருந்தினர் சாந்தி சர்வோத்தம் சார்பில் ஸ்ரீஹரிதாஸின் கேள்வி பதில், தசா வைபவா ஆகிய நூல்களையும் பரிசாக வழங்கி னார்கள்.

லண்டனில் இருந்து பிரத்யேகமாக வந்திருந்து விருதை பெற்ற டாக்டர் ஜெயந்தி யோகராஜா, கனரா வங்கியின் மூத்த உயர் அதிகாரி( ஓய்வு) சாந்தி சர்வோத்தம் (சமூக ஆர்வலர், ஆன்மீக நூல் ஆசிரியர்), மக்கள்குரல் ராம்ஜீ ஆகியோர் சக கலைஞர்களின் வாழ்நாளில் மறக்க முடியாத ஓர் இனிய அனுபவம் என்று மனம் திறந்து பாராட்டினார்கள்.

ஊரார்ப் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்பது ஒரு பழமொழி. ''அடுத்தவர்களை சந்தோஷப்படுத்தி பார்ப்பதில் ஒரு சந்தோஷம்'' என்பதை கடைசி மூச்சிருக்கும் வரை செயல்படுத்திக் காட்டியவர் சரஸ்வதி நிகேதனின் நிறுவனர் – சரஸ்வதியின் தாய் விஜயகுமாரி கங்காதரன். அவர் கண்ட கனவை நினைவாக்கி இருக்கிறார் மகள் சரஸ்வதி. அதைப் பார்த்து மகிழ்ந்து மகளை உச்சி முகர்வதற்கு அவர் இல்லாதது ஒரு பெரும் குறையே... என்று உணர்ச்சி வசப்பட்டு பேசினார் விருது பெற்றவர்களில் ஒருவரான ஹேமலதா ராமச்சந்திரன். இவரும், சரஸ்வதியும் கல்லூரித் தோழிகள். ஒரே நேரத்தில் நாட்டியப் பள்ளியை துவக்கி இன்று முன் வரிசை நாட்டிய குருமார்களின் வரிசையில் ஒருவராக இருப்பவர். (1992ல் முக்கியது பரத கலாலயம் நாட்டிய இசைப்பள்ளி).

## வள்ளுவர் கோட்டம் சீரமைப்பு பணிகள் : அமைச்சர் சாமிநாதன் ஆய்வு

சென்னை, ஏப் 23–

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனை தொடர்ந்து அமைச்சர் சாமிநாதன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:– ''வள்ளுவர் கோட்டம் சுமார் 80 கோடி ரூபாய் செலவில் புனரமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இன்றைக்கு புதுப்பொலிவு பெற்றிருக்கிறது. இதில் ஒலி ஒளி காட்சி, அதேபோல் திருக்குறளைப் பற்றி ஒரு ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் அதற்கான வகுப்புகள் இங்கு துவங்குகின்ற வகையில் திட்டமிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரசின் செய்தித் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய வள்ளுவர்கோட்டப்பணிகள்முடிவுற்ற பிறகு, இங்கு 1500 பேர் அமர்ந்து நிகழ்ச்சி நடத்தக்கூடிய வகையில் குளிர்சாதன வசதியோடு அரங்கங்கள் எல்லாம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் கரங்களால் விரைவில் திறக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். மே மாதம் இறுதிக்குள் பணிகள் நிச்சயமாக முடிவடையும். இவ்வாறு அவர் கூறினார். ஆய்வின்போது சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் இரா. வைத்திநாதன் மற்றும் பலர் உள்ளனர்.

# சென்னையில் சிறப்பாக பணியாற்றிய காவலர்கள்: கமிஷனர் அருண் நேரில் பாராட்டு, பரிசு



சென்னை, ஏப். 23

**சென்னையில் சீரிய பணியாற்றிய காவலர்களை கமிஷனர் அருண் நேரில் அழைத்து பாராட்டி வெகுமதி வழங்கினார்.**

கடந்த 2020 ம் ஆண்டு அண்ணாநகர் காவல் மாவட்டத்தில் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்து கொலை முயற்சி செய்தது தொடர்பாக அண்ணா நகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் போக்சோ உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு 25 வயது எதிரி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார். மேற்படி வழக்கு விசாரணை முடிவடைந்து எதிரிக்கு 13 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் ரூ.20,000 அபராதமும் விதித்து நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதே போல் திருவொற்றியூர் பகுதியில் வசித்து வரும் 47 வயது பெண்மணி ஒருவர் மன அழுத்தம் காரணமாக அழ்வார்பேட்டை பகுதியிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார். மேற்படி பெண் மருத்துவமனையின் 5வது மாடியிலிருந்து கீழே குதித்து தற்கொலை செய்ய முயற்சி செய்வதாக காவல் கட்டுப்பாட்டறைக்கு கிடைத்த தகவலின்பேரில், அங்கு போக்குவரத்து சுற்றுக் காவல் பணியிலிருந்த கோடம்பாக்கம் போக்குவரத்து காவல் நிலைய தலைமைக் காவலர் தேவராஜ் என்பவர் உடனடியாக மருத்துவமனையின் 5வது மாடியின் வெளிப்பக்கம் சென்று அங்கிருந்த மேற்படி பெண்ணை பத்திரமாக மீட்டு, மருத்துவமனையில் சேர்த்தார்.

திருவான்மியூர் ஜெயந்தி சிக்னல் பகுதியில் வாகன தணிக்கை பணியிலிருந்த திருவான்மியூர் காவல் நிலைய போக்குவரத்து காவல் நிலைய ஆய்வாளர் ஜாகீர் உசேன், தலைமைக் காவலர்கள் நாராயணன், P.குணசேகரன், காவலர்கள் மாதர், தமிழரசன் ஆகியோர் பழவந்தாங்கல் பகுதியில் இருசக்கர வாகனத்தை திருடி தப்பி வந்த தினேஷ் (எ) துண்டு தினேஷ் என்பவரை மடக்கிப்பிடித்து விசாரணை செய்ததில் எதிரி மீது பல குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது. அதன் பேரில் எதிரி பழவந்தாங்கல் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். அவரிடமிருந்து 1 இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

அண்ணாநகர் போக்சோ வழக்கில் தண்டனை பெற்று தர சீரிய பணியாற்றிய ஆயிரம் விளக்கு அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் தனலட்சுமி, தற்கொலைக்கு முயன்ற பெண்ணை காப்பாற்றிய கோடம்பாக்கம் போக்குவரத்து காவல் நிலைய போக்குவரத்து தலைமைக் காவலர் தேவராஜ் மற்றும் திருவான்மியூர் பகுதியில் வாகன தணிக்கையின் போது இருசக்கர வாகன திருட்டு குற்றவாளியை கைது செய்த திருவான்மியூர் போக்குவரத்து காவல் ஆய்வாளர் ஜாகீர் உசேன் தலைமைக் காவலர்கள் கே.பி.நாராயணன், பி.குணசேகரன், காவலர்கள் எம். மாதர், ஆர்.தமிழரசன் ஆகியோரை சென்னை பெருநகர காவல்துறை ஆணையாளர் ஆ.அருண் நேரில் அழைத்து பாராட்டி வெகுமதி வழங்கினார்.



# இந்தியன் ஆயில் அலுவலகத்தில் தீத்தடுப்பு விழிப்புணர்வு பயிற்சி

சென்னை ஏப். 23

**பொதுத்துறை நிறுவனமான இந்தியன் ஆயில் தீத் தடுப்பு விழிப்புணர்வு வாரத்தையொட்டி தமிழ்நாடு அரசு தீ தடுப்பு துறை கூட்டுடன் சென்னையில் நுங்கம்பாக்கத்தில் உள்ள இதன் அலுவலகத்தில் தீ தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தியது.**

இந்தத் தீத் தடுப்பு நிகழ்ச்சியில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் 200 ஊழியர்கள் பங்கேற்றனர். செயற்கையாக உருவாக்கப்பட்ட தீயை அணைக்க ஊழியர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும், எந்த வழியாக வெளியேற வேண்டும் எங்கு கூடி பாதிக்கப்பட்டவர்களை எவ்வாறு மீட்பது போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டது.

அரசு மாவட்ட தீயணைப்பு அதிகாரி தென்னரசு மற்றும் உதவி மாவட்ட அதிகாரி சிவசங்கரன் கலந்து கொண்டு ஊழியர்களுக்கு பயிற்சியை அளித்தனர் ஒரு இடத்தில் தீ விபத்து ஏற்பட்டால் அதை பல்வேறு தீயணைப்பான்கள் மூலம் எவ்வாறு அணைப்பது என்பது பற்றி பயிற்சியும் அளித்தனர் .

இந்த நிகழ்ச்சியில் இந்தியன் ஆயில் மண்டல சேவை தென் மண்டல எக்ஸிக்யூட்டிவ் டைரக்டர் எம் .சுதாகர் மற்றும் தென் மண்டல தலைமை பொது மேலாளர் தருண்குமார் ஆகியோர் தீயணைப்புத்துறை அதிகாரிகள் செயல்பாட்டுக்கு நன்றி தெரிவித்தனர். ஊழியர்கள் திறமையாக இந்த பயிற்சியை மேற்கொண்டதற்கு வாழ்த்தும் தெரிவித்தனர்.

## தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியில் 7.39 லட்சம் புதிய சந்தாதாரர்கள் சேர்ப்பு

சென்னை, ஏப்.23

தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அமைப்புகடந்த பிப்ரவரி மாதத்துக்கான தற்காலிக சம்பள பட்டியல் தரவை வெளியிட்டு உள்ளது. இது 16.10 லட்சம் உறுப்பினர்களின் நிகர சேர்க்கையை குறிப்பிடுகிறது. கடந்த ஆண்டு பிப்ரவரி மாதத்துடன்ஒப்பிடும்போது நிகர சம்பள பட்டியலில் பெயர் சேர்த்தல்களில் 3.99 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு கடந்த பிப்ரவரி மாதத்தில் சுமார் 7.39 லட்சம் புதிய சந்தாதாரர்களை சேர்த்துள்ளது. புதிய சந்தாதாரர்களின் சேர்க்கைக்கு அதிகரித்து வரும் வேலைவாய்ப்புகள், பணியாளர் நலன்கள் குறித்த விழிப்புணர்வு மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் வெற்றிகரமான மக்கள் தொடர்பு திட்டங்கள் ஆகியவைதான் காரணம்.

மேற்கண்ட தகவல் பத்திரிகை தகவல் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

**ருபீக் கேபிடல் பிரைவேட் லிமிடெட்**

45/பி, சுபம் காம்ப்ளக்ஸ், 1வது ஏ மெயின், ஜே.பி.நகர் 3வது கட்டம், பெங்களூரு - 560078.

**தங்க ஏல அறிவிப்பு**

கீழ்க் கண்ட கடன் எண்கள் தொடர்பாக அடமானம் வைக்கப்பட்ட தங்கம் பாக்கித் தொகையை திருப்பிச் செலுத்தாத காரணத்தால் ஏலம் விடப்படும் என்று கடன் பெற்றவர்களுக்கும் , பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. **https://gold.samil.in** என்ற இணையதள முகப்பு மூலம் **15/05/2025** அன்று ஏலம் நடைபெறும் மேலே குறிப்பிடப்பட்ட தேதியில் அடமானம் செய்த பொருளை திருப்பிக்கொள்ள வேண்டும். எந்த ஒரு காரணத்திற்காகவும் அன்றைய நாளில் திருப்பிக்கொள்ளவில்லை எனில், அடமானம் செய்யப்பட்ட ஆபரணங்களின் ஏதேனும் அல்லது அனைத்து பொருட்களையும் நமது ருபீக் நிறுவனம் எவ்வித முன் அறிவிப்பும் இல்லாமல் மின்-ஏலம் மூலம் ஏலம் செய்துவிடும்

**கடன் எண்கள் (LOS ID)**

**12010623, 12010899**

மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும் - **1800 419 8000**

எஸ்டி/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

ருபீக் கேபிடல் பிரைவேட் லிமிடெட்

## JMJ பின்டெக் லிமிடெட்

(முன்னர் மீனாட்சி எண்டர்பிரைசஸ் லிமிடெட்)

CIN : L51102TZ1982PLC029253

பதிவு அலுவலகம்: கடை எண். 3, 1வது தளம், ஆதி விநாயகா வளாகம், எண். 3, பேருந்து நிலையம், கோபால்சாமி கோயில் தெரு, கணபதி, கோயம்புத்தூர் வடக்கு, தமிழ்நாடு 641006

Email: investor@jmjfintechltd.com | Website: www.jmjfintechltd.com | Ph. No. : 7395922291/92

### 31.03.2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதி முடிவுகள் அறிக்கையின் சுருக்கம்

ரூ. லட்சத்தில்

| விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு | |
|---|---|---|---|---|---|
| | 31.03.2025 | 31.12.2024 | 31.03.2024 | 31.03.2025 | 31.03.2024 |
| | குறிப்பை பார்க்க | (தணிக்கை செய்யாதது) | (தணிக்கை செய்தது) | (தணிக்கை செய்தது) | (தணிக்கை செய்தது) |
| செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | 610.71 | 359.44 | 306.55 | 1714.72 | 746.75 |
| காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/ அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 332.92 | 145.56 | 164.25 | 945.56 | 385.76 |
| காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன் மற்றும் விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 332.92 | 145.56 | 164.25 | 945.56 | 385.76 |
| காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின் மற்றும் விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 66.15 | 101.58 | 46.22 | 516.91 | 213.78 |
| நடப்பு காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/நஷ்டம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) ஆகியவற்றை உள்ளடக்கியது | 66.15 | 101.58 | 46.22 | 516.91 | 213.78 |
| செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 1280.00 | 1280.00 | 1240.00 | 1280.00 | 1240.00 |
| தொடரும் மற்றும்நிறுத்தப்பட்டசெயல்பாடுகளுக்கான பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) (ஒவ்வொன்றும் ரூ.10/–) | | | | | |
| அடிப்படை | 0.52 | 0.79 | 0.37 | 4.04 | 1.72 |
| பலம் குறைந்தது | 0.52 | 0.79 | 0.37 | 4.04 | 1.72 |

குறிப்பு:

1. நிறுவனத்தின் தனியான நிதி முடிவுகள், நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவு 133ன் கீழ் அறிவிக்கப்பட்ட இந்திய கணக்கியல் தரநிலை ('Ind. AS') மற்றும் நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதிகள், 2015, அவ்வப்போது திருத்தப்படும்படி, இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) சுற்றறிக்கைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் வழிகாட்டு வெளியீடுகள், செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015ன் விதிமுறை 63(2), விதிமுறை 33 மற்றும் விதிமுறை 52, திருத்தப்பட்டவை மற்றும் இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிற அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் நடைமுறைகள் ஆகியவற்றுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு உள்ளன.
2. மேற்கண்ட முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, பின்னர் ஏப்ரல் 22, 2025 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டன.
3. மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான தனியான நிதி முடிவுகள், சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்டுள்ளன.
4. நடப்பு மற்றும் முந்தைய நிதியாண்டின் நான்காவது காலாண்டிற்கான புள்ளிவிவரங்கள், முழு நிதியாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட புள்ளிவிவரங்களுக்கும், நடப்பு மற்றும் முந்தைய நிதியாண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதி வரை வெளியிடப்பட்ட ஆண்டு முதல் இன்றுவரை புள்ளிவிவரங்களுக்கும் இடையிலான சமநிலை புள்ளிவிவரங்கள் ஆகும், அவை சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வுக்கு உட்பட்டவை.
5. ஆர்பிஐ முதன்மை வழிகாட்டுதல்கள் DNBR.PD.002/03.10.119/2016-17ன்படி பெறப்பட்ட துணை கடன்கள் குறித்த அறிக்கை - NBFC பொது வைப்புத்தொகைகளை ஏற்றுக்கொள்வது.
6. இந்த நிறுவனம் முதன்மையாக நிதி வணிகத்தில் ஈடுபட்டுள்ளது மற்றும் Ind As 108 செயல்பாட்டுப் பிரிவுகளின்படி அடையாளம் காணப்பட்ட தனித்தனி அறிக்கையிடக்கூடிய பிரிவுகள் எதுவும் இல்லை.
7. முந்தைய காலங்கள்/ஆண்டுக்கான புள்ளிவிவரங்கள், தற்போதைய காலத்திற்கு இணங்க தேவையான இடங்களில் மீண்டும் தொகுக்கப்பட்டுள்ளன/ மறு வகைப்படுத்தப்பட்டு உள்ளன. அறிக்கையின் கீழ் உள்ள காலாண்டில் குறிப்பிடத்தக்க மறுசீரமைப்பு/மறுவகைப்படுத்தல் எதுவும் இல்லை.

குழுவின் ஆணைப்படி
JMJ பின்டெக் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– ஜோஜு மடத்தும்பாடி ஜானி
நிர்வாக இயக்குனர்
DIN: 02712125

இடம்: கோயம்புத்தூர்
தேதி : 22.04.2025

## பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

BAJAJ FINSERV

கார்ப்பரேட் அலுவலகம்: செரிப்ரம் ஐடி பார்க், பி2 கட்டிடம், 5வது தளம், கல்யாணி நகர், புனே, மகாராஷ்டிரா 411014
கிளை அலுவலகம்: எண்.804, 805, 806, 5வது தளம், டெல்டா விங், ரஹேஜா டவர்ஸ், 177, அண்ணா சாலை, சென்னை – 600 002.

### சுவாதீன அறிவிப்பு

**2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், பிரிவு 13(4), 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 8(1)வது விதிமுறை கீழ். (பிற்சேர்க்கை IV)**

கீழே கையொப்பமிட்டுள்ள மெசர்ஸ் பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (பிஎச்எப்எல்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(2) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறைக்கு ஏற்ப கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்)/ உடன்கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் மெசர்ஸ் பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் சார்பாக, கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன 8–(1)வது விதிமுறைக்கு இணங்கவும் சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்(கள்)/உடன் கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு திரும்ப செலுத்த வேண்டிய தொகை மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

| கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர் (கள்) பெயர் (LAN எண், கிளை பெயர்) | ஈடுபெற்ற ஆஸ்தியின் விவரம் (அசையா சொத்து) | டிமாண்ட் நோட்டீஸ் தேதி மற்றும் தொகை | சுவாதீன தேதி |
|---|---|---|---|
| கிளை: சென்னை, கடன் கணக்கு எண்: H403DHB0071910 மற்றும் H403DHT0071911, 1. சதீஷ் குமார் ஆர் (கடன்தாரர்), 2. ப்ரீத்தி எஸ் (உடன் கடன்தாரர்) பிளாசா பிரிஸ்டைன் ஏக்கர்ஸ், பேஸ் 1, பிளாக் 7A, பிளாட் எண் 104, மேடவாக்கம், நூக்காம்பாளையம் ரோடு, பெரும்பாக்கம், காஞ்சிபுரம், சென்னை, தமிழ்நாடு 600100 | விவசாயம் அல்லாத நிலத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும் பின்வருமாறு: பிளாட் எண்.4, பிளாக் எண்.7Aல் உள்ள 145007 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு நிலம் 268.0 சதுர அடி. இந்த சொத்து சர்வே எண் 216/3D பகுதி, 216/3C, 216/3B, 216/3A, 216/2 பகுதி, 215/ பகுதி, 214/1, 213/2 பகுதி, பெரும்பாக்கம் கிராமம், சேலையூர், தென் சென்னை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. நிலத்தின் எல்லைகள் : கிழக்கு: நிலம் சர்வே எண்கள்.216/1. 226/1, 226/1A, 2A, 266/1A1, மற்றும் 227/1, மேற்கு : சர்வே எண். 212, 213/1 மற்றும் 217/1ல் உள்ள நிலம், வடக்கு : சர்வே எண்கள். 211/2, 213/1 & 214/2ல் உள்ள நிலம், தெற்கு : சர்வே எண்கள். 218/1, 2A, 2C & 216/1ல் உள்ள நிலம் | 22 ஜனவரி 2025 ரூ.25,58,586/- (ரூபாய் இருபத்தைந்து லட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து ஐநூற்று எண்பத்தாறு மட்டும் மட்டும்) | 21.04.2025 |

தேதி: 23.04.2025, இடம்: சென்னை

ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

## பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

BAJAJ FINSERV

கார்ப்பரேட் அலுவலகம்: செரிப்ரம் ஐடி பார்க், பி2 கட்டிடம், 5வது தளம், கல்யாணி நகர், புனே, மகாராஷ்டிரா 411014
கிளை அலுவலகம்: யூனிட் எண்.804, 805, 806, 5வது தளம், டெல்டா விங், ரஹேஜா டவர்ஸ், 177, அண்ணா சாலை, சென்னை – 600002.

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், 2002 பிரிவு 13(2)ன் கீழ் டிமாண்ட் நோட்டீஸ்.** கீழே கையொப்பமிட்டுள்ள M/s பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆகிய நான், கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்) ஆகியோர் பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டில் அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்கள் மீது வீட்டு கடன்(கள்)/கடன்(கள்) வாங்கி அவர்கள் அசல், வட்டி மற்றும் இதர கட்டணங்களை திரும்ப செலுத்த தவறியதால் அவர்களுக்கு கீழ்க்கண்ட அறிவிப்பினை அளித்துள்ளேன். இதன் விளைவாக கடன்கள் செயல்படாத சொத்துக்களாக (N.P.A.'s) உள்ளது. ஆகையால் அவர்களுக்கு 2002 ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், 13(2)வது பிரிவு மற்றும் விதிகளின் கீழ் அறிவிப்புகள் கடைசியாக தெரிந்த அவர்களின் முகவரிக்கு அனுப்பப்பட்டது. எனினும் அவை வாங்கப்படாமல் திரும்ப வந்துவிட்டது. அவர்கள் பெற்ற கடன் வசதியின் கீழ் திரும்ப செலுத்த வேண்டிய நிலுவை தொகையை செலுத்தக் கோரி இந்த வெளியீட்டின் மூலம் கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்) ஆகியோருக்கு தெரிவிக்கப்படுகிறது.

| கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) பெயர், கடன் கணக்கு எண்/கிளையின் பெயர் | ஈடுபெற்ற ஆஸ்தியின் விவரம் (அசையா சொத்து) | டிமாண்ட் நோட்டீஸ் தேதி மற்றும் தொகை |
|---|---|---|
| கிளை : சென்னை **LAN: H403HHL0093658 & H403HLT0153489** **1. பி சத்யா (கடன்தாரர்), 2. கே குமார் (உடன் கடன்தாரர்)** இருவரது வசிப்பிடம்: எண் 2/5, வாட்டர் பேங்க் காலனி, கோட்டூர்புரம் சென்னை, தமிழ்நாடு 600085 | விவசாய நிலம் அல்லாத சொத்து மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்: காஞ்சிபுரம் மாவட்டம் பல்லாவரம் தாலுகா மங்காடு 'பி' கிராமத்தில் அபார்ட்மெண்ட் எண். 0712, 7வது தளம், 4A பிளாக், டிவைன் சிட்டி பேஸ் 1, கார்பெட் பகுதி 414 சதுர அடி, சூப்பர் பில்ட்டப் பகுதி 591 சதுர அடி மற்றும் ஓபன் மோட்டார் சைக்கிள் நிறுத்தும் இடத்தை உள்ளடக்கி உள்ளது. | **15 மார்ச் 2025 ரூ.23,86,892/- (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து எண்பத்தாறாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று இரண்டு மட்டும்)** |
| கிளை : சென்னை **LAN: 403HSLED068705 & 403TSHED095934** **1.ஆர்.கே.அருண்குமார் (கடன்தாரர்),** 24 ராமஜெயம் ஹோம்ஸ் S1, 1வது தெரு, செயின்ட் ஆண்டனி நகர், திருமுல்லைவாயல், சென்னை, தமிழ்நாடு 600062. | விவசாய நிலம் அல்லாத சொத்து மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்: பிளாட் எண். S1, இரண்டாவது தளம், ராமஜெயம் ஹோம்ஸ், செயின்ட் ஆண்டனி நகர், திருமுல்லைவாயல், சென்னை, தமிழ்நாடு 600062. | **25 மார்ச் 2025 ரூ. 40,53,401/ (ரூபாய் நாற்பது லட்சத்து ஐம்பத்து மூவாயிரத்து நானூற்று ஒன்று மட்டும்)** |

பெறப்படாத அறிவிப்புகளுக்கு மாற்று சேவையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) ஆகியோர் கோரப்பட்டுள்ள தொகை, மேலும் வட்டியை இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்கு திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் (எந்தவித பாரபட்சமும் இன்றி பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு உள்ள மற்ற சரியான தீர்வின்படி) 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், பிரிவு 13(4)ன்படி ஈடுபெற்ற ஆஸ்திகள்/அடமான ஆஸ்திகளை சுவாதீனம் எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் வசமிருப்பதால் அவற்றை மாற்றவோ அல்லது மூன்றாவது பார்ட்டி உருவாக்குதல் போன்றவற்றை மேற்கொள்ளக்கூடாது என்று மேற்குறிப்பிடப்பட்டுள்ள பார்டிகள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தேதி : 23.04.2025
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்



சங்கர் பாண்டியராஜ், ஆர்.தமிழரசி

## 'ஆர்வம் ஐஏஎஸ் அகாடமி' மாணவர்கள் ஐஏஎஸ் தேர்வில் சாதனை வெற்றி

சென்னை, ஏப் 23–

சென்னை அண்ணாநகரில் செயல்பட்டு வருகின்ற 'ஆர்வம் ஐஏஎஸ் அகாடமி'யில் படித்த மாணவர்கள் தமிழை விருப்பப் பாடமாக எடுத்துப் படித்து சாதனை வெற்றி பெற்றுள்ளனர்.

இந்திய குடிமைப்பணிகள் தேர்வாணையம் 2024ம் ஆண்டுக்கான குடிமைப் பணிகள் தேர்வுக்கான முடிவுகளை வெளியிட்டுள்ளது. இதில் ஆர்வம் ஐஏஎஸ் அகாடமியில் படித்த எஸ். சங்கர் பாண்டியராஜ், ஆர்.தமிழரசி ஆகியோர் அகில இந்திய அளவில் முறையே 807 மற்றும் 861 வது ரேங்க் பெற்று வெற்றி பெற்றுள்ளனர்.

குறிப்பாக, இருவரும் தமிழை விருப்பப்பாடமாக எடுத்து குடிமைப் பணித் தேர்வில் சாதனை வெற்றி பெற்றுள்ளனர். அதிலும் முக்கியமாக சங்கர் பாண்டியராஜ் தமிழ் விருப்பப்பாடம், தமிழ் வழியிலேயே தேர்வு எழுதியதோடு நேர்முகத்தேர்வினையும் தமிழிலேயே எதிர் கொண்டு இந்த வெற்றியினைப் பெற்றுள்ளார்.

### பொது அறிவிப்பு

இதனால் பொது மக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால், எனது கட்சிக்காரர் திருமதி.J.கஸ்தூரி, க/பெ லேட்.ஜெயபாலன் அவர்கள் தன்னுடைய பெயரில் அடையார் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவான சொத்தின் அசல் ஆவணங்களான கிரைய பத்திரம் எண்.4670/1995 மற்றும் பொது அதிகார பத்திரம் எண்.1389/1994, கடந்த 15.04.2025 தேதி அன்று வீட்டின் அருகில் தொலைத்து விட்டார். இதை கண்டுபிடிப்பவர்கள் அல்லது இதை பற்றி தெரிய வருபவர்கள் 9500530345 என்ற எண்ணிற்கு தெரிவித்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**V. A. THYAGARAJAN, M.Com., B.L.,**
Advocate - MADRAS HIGH COURT
Office: Shop No. 86, 3rd Floor, J.J. Complex,
Thirumangalam, Anna Nagar, Chennai 600 040.